# பத்திக்கை செய்தி

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக, அரியலூர் மாவட்டத்தில் பாலியல் குற்றங்களினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வி சுகாதாரம் உளவியல், மறுவாழ்வு மற்றும் மேம்பாடு ஆகியவற்றிற்காக ஆதரவு நபர்கள் மதிப்பூதிய அடிப்படையில் நியமிக்கப்பட உள்ளனர். மதிப்பூதிய ஆதரவு நபர் பணிக்கு விண்ணப்பிக்கும் நபர்கள் முதுகலை சமூகப்பணி (அ) சமூகவியல் (அ) உளவியல் (அ) குழந்தை வளர்ச்சி (அ) 3 ஆண்டுகள் பட்ட படிப்புடன் கூடிய குழந்தைக்கல்வி மற்றும் முன்னேற்றம் (அ) பாதுகாப்பு பிரச்சினைகள் ஆகியவை முன் அனுபவம் இருக்க வேண்டும். மேலும் 2020 POCSO விதி 5(6)ன்படிஆதரவு நபர் பணிக்கு சிறந்த முறையில் செயல்படும் நிறுவனங்கள் மற்றும் குழந்தைகள் இல்லங்களில் பணிப்புரியும் பணியாளர்களும் இப்பணிக்கு தகுதியானவர்கள்.

தேர்வு செய்யும் ஆதரவு நபர்கள் 3 ஆண்டுகள் பணிப்புரிய வேண்டும். இப்பணிக்கு மதிப்பூதியம் குறைந்தப்பட்ச ஊதிய சட்டம் 1948 ன் படி நிர்ணயம் செய்யப்படும். மேலும் களப்பணி மேற்கொண்ட உண்மையான பயணப்படியும் வழங்கப்படும். இப்பணி நிரந்தரப்பணி இல்லை. ஆதரவு நபர் பணிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபட்டிருக்கக் கூடாது. வழக்குகள் எதுவும் அவர்கள் மீது பதிவு ஆகியிருக்கக் கூடாது. ஆதரவு நபர்களின் வயது வரம்பு 42 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். இப்பணிக்கான விண்ணப்பம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு (அ) https://ariyalur.nic.in என்ற முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம். தகுதியான விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை 16-02-2026 அன்று மாலை 5.30 மணிக்குள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 2வது தளம், அரசு பல்துறை வளாகம், அரியலூர் 621 704. என்ற முகவரியில் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும். கால தாமதமாக வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
அரியலூர்.

30/1/26
DCPO.

2/3

30/1/26